**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2017**

---

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 264) 62(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்தினால் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுவதால் அதன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் வருமானம் அட்டுறு அடிப்படையிலும் செலவினம் காசு அடிப்படையிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், நிதியத்திற்கு கிடைக்கும் முழுமையான பங்களிப்பு பெறுவனவு செலவினமொன்றாக இனங்காணப்பட்டதன் காரணமாக தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் பற்றாக்குறையொன்று உருவாகியிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மாத்திரம் முறையே ரூபா 36,428,661 மற்றும் ரூபா 64,985,626 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,421,320,802 தொகையான திரண்ட நிதி மீதியும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,382,039,109 வரை குறைவடைந்திருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2012 பெப்ரவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் அந்தந்த மாதத்தில் மரணித்த அங்கத்தவர் தொடர்பான அறிக்கை அடுத்தவரும் மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர்கள் ஊடாக பெறப்பட்டு அந்த அறிக்கையின் பிரகாரம் மரணித்த அங்கத்தவர்களின் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 292 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய நிலுவையான பங்களிப்புத் தொகைகளின் பெறுமதி ரூபா 1,317,604,316 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட நிலுவை பங்களிப்புத் தொகையுடனான உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 184 ஆக இருந்ததுடன், அதன் பங்களிப்புத் தொகை பெறுமதி ரூபா 1,314,808,618 ஆக இருந்தது. இதில் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட நிலுவையாகவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 558,549,276 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பங்களிப்புப் பணம் எதுவும் செலுத்தாத உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 96 ஆக இருந்ததுடன் அந்நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 475,638,177 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 61 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து மீளாய்வாண்டு இறுதி திகதி வரை கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 435,431,048 ஆக இருந்ததுடன் அது மொத்த நிலுவை பங்களிப்புத் தொகையில் 33 சதவீதமாக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 64,985,626 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 36,428,661 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் உள்ள அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் செலுத்தும் நோக்கத்துடன் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை தாபிக்கப்பட்டதுடன் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரச உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதியம் மற்றும் விதவை அநாதை ஓய்வூதிய நலன்கள் உரித்தாவதால் 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் நிதியத்திற்கு அங்கத்துவர்கள் சேர்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறு புதிய அங்கத்துவப் பணம் கிடைக்காமை மற்றும் இருக்கும் அங்கத்தவர்களின் பங்களிப்பு ஓய்வூதியம் செலுத்துவதற்கு கூட போதியதாக இல்லாமையால் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் ஓய்வூதியம் செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. அதன் பிரகாரம், நிதியம் தாபிக்கப்பட்ட அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

ஓய்வூதியத் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பிரிவின் மூலம் அல்லது நீப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | நிதியத்தின் செயற்பாட்டுத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) பங்களிப்புப் பண அறவீடு | நிலுவைப் பங்களிப்புப் பணத்தையும் மீளாய்வாண்டின் பங்களிப்புப் பணத்தையும் உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) அங்கத்தவர் பதிவேடு | பிரதேச செயலக மட்டத்தில் தகவல்களைச் சேகரித்து அங்கத்தவர் தரவுகள் நாளது வரையாக்கப்படாமை மற்றும் அதன்படி ஓய்வூதியச் செலவினம் உறுதிப்படுத்தப்படாமை. |